நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நேற்று (22.06.2024) நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையினை முன்னிட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

தலைமை: சி.நந்தகுமார்! முன்னிலை: மா.பா.அன்பு - விமலா கிருஷ்ணமூர்த்தி - மயிலை ஆர்.பாலு!

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் கழகக் கொடியேற்றி உணவு!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - எஸ்.முரளி வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 23- சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா இன்று (23/6/2024) மதியம் 12மணியளவில் மயிலாப்பூர் தெற்கு மாடவீதி,சங்கீதா உணவகம் அருகில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு லயன். சி.நந்த குமார் தலைமை வகிக்கிறார். வட்ட செயலாளர் மா.பா.அன்பு, விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி, மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மயிலை த.வேலு கழகக் கொடியேற்றி உணவு வழங்குகிறார்.

இதில் பகுதி செயலாளர் எஸ்.முரளி இனிப்பு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மயிலை கிழக்கு பகுதி வட்ட செயலாளர்கள் ஏ.தாஸ்,அ.தவநேசன், வெ.வெற்றி வேல், கோ.கண்ணன், பா.பொன்னுசாமி,துரை பார்த்திபன்.மற்றும் வர்த்தக அணி நிர்வாகிகள் தலைவர் த.சீனிவாசன், துணை தலைவர் க.மதியழகன் வரவேற்புரை வழங்குகிறார்கள்.

மேலும் துணை அமைப்பாளர்கள் ஆர்.கோவிந்தராஜன், முருகராஜா, ஸ்ரீக ணேஷ், வெ.கனிமொழி, கே.வெங்கட்ராமன், கோ.சு. கருணாநிதி, ஏ.பாஸ்கர் மற்றும் பலர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்கின்றனர்.

டி.ருப்நாத், மார்க்கெட் சுரேஷ், மார்க்கெட் ராஜேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தயாநிதி மாறன், சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்கு பகுதி, 101 வது வட்டத்தில் பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், வடக்கு பகுதி செயலாளர் ச.பரமசிவம், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 (அ) வட்ட கழகச் செயலாளர் சி.பி.திருமலை மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வட்டச் செயலாளர் துரை பார்த்திபன் தலைமையில்

மயிலை 171வது வட்டத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு நல உதவிகள் - மகளிருக்கு புடவை!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. - எஸ்.முரளி - கீதா முரளி வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 23- மயிலை கிழக்குப்பகுதி 171வது வட்டக் கழகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழா இன்று (23.6.2024 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.00 மணியளவில் சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், கிரீன்வேஸ் சாலை, ஹோட்டல் ராஜ்பேலஸ் அருகில் நடைபெறுகிறது.

வட்டச்செயலாளர் துரை பார்த்திபன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பள்ளி குழந்தைகளுக்கு ஸ்கூல் பேக், நோட்டு புத்தகம் மற்றும் மகளிருக்கு புடவை நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

இவ்விழாவில் நலத்திட்ட உதவிகளை சென்னை தென் மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., மயிலை கிழக்குப்பகுதி செயலாளர் எஸ்.முரளி மற்றும் மாமன்ற உறுப்பினர் கீதாமுரளி ஆகியோர் வழங்குகின்றனர்.

இதில் பொதுக்குழு உறுப்பினர், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக்கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்டக்கழக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், மன்ற நிர்வாகிகள், மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

சட்டப்பேரவையில் நேற்றைய குறள்!

சட்டமன்றப் பேரவையில் நேற்று, பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் படித்த குறளும், அதற்கான கலைஞர் உரையும் வருமாறு:-

குறள்:

"உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை எல்லாம் பொறுத்து."

கலைஞர் உரை : பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத்தொழில் இருப்பதால் அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.

பகுதிச் செயலாளர் எஸ்.மதன்மோகன் தலைமை! கே.மகேஷ் வரவேற்புரை!

சேப்பாக்கம் 62 'அ' வட்டத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டம்!

பவானி கண்ணன் சிறப்புரை! - தயாநிதிமாறன் எம்.பி. - மு.க.தமிழரசு - நே.சிற்றரசு பங்கேற்பு!

சென்னை, ஜூன் 23 - சென்னை தெற்கு மாவட்டம், சேப்பாக்கம் பகுதி 62 அ வட்டக் கழகம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் திராவிட மாடல் அரசின் மூன்றாண்டு சாதனை விளக்கம் நாடாளுமன்றத் தேர்தலில் பெரு வாரியான வாக்குகள் அளித்த வாக்காளர்களுக்கு நன்றி அறிவிக்கும் மாபெரும் பொதுக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (23.6.2024 ஞாயிறு) மாலை 6 மணிக்கு கலவை தெரு, சாமி பண்டாரம் தெரு சந்திப்பு சிந்தாதிரி ப் பேட்டையில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு பகுதிச் கழகச் செயலாளரும் 9-வது மண்டலக் குழுத் தலைவருமான எஸ்.மதன்மோகன் தலைமை வகிக்கிறார். 62 அ வட்டச் செயலாளர் கே.மகேஷ் வரவேற்கிறார். 62-வது வட்டக் கழகச் செயலாளர் ஆர்.ஜெகதீசன் எம்.சி., எம்.ராஜரத்தினம், எஸ். சுரேஷ்குமார், பி.ராஜேஷ், மாக்ஸி கே.அலீப், மல்லிகா பீ, பி.பாலசந்தர், எம்.நந்தகுமார், ஆ.சிவராஜ், எப். நசீர், ஆர்.ராதாகிருஷ்ணன், எஸ்.கார்த்திக், யு.பாஷா, ஆர்.ரங்கநாதன், ஏ.அன்வர் பாஷா, பி.எஸ். சத்தீஷ், எஸ்.சங்கர், கே.டி.ராமலிங்கம், சங்கரபாண்டியன், என்.எஸ்.பாஸ்கரன், எஸ். பரமசிவம், வி.நடராஜ், என்.ஸ்ரீகாந்த், வேளாங் கன்னி, சாந்தி வசந்தா, ஆனந்தி, லட்சுமிபாய், சுந்தர்பாய் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

நலத்திட்ட உதவிகளை வழங்கி தயாநிதிமாறன் எம்.பி., மு.க.தமிழரசு, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தலைமைக் கழகப் பேச்சாளர் பவானி கண்ணன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் பி.பிரபாகரன், மு.சின்னராஜ், கே.கோபு, ஏ.தமீம் அன்சாரி, ஜி.வெங்கடேசன், எம்.சி.பி.இளையாராஜா, எஸ்.கே.ராஜ், ப.சிதம்பரம், ஈஸ்வரி வெங்கடேசன், எஸ்.எச். ரகமத்துல்லா, ஜி. ராஜேந்திரன், ரங்கநாதன், ஜெ.விஜய், வழக்கறிஞர் கஜேந்திரன், வெ.தமழ்வாணன், ஜி.கே. கிரிதரன், என். சுரேஷ், பி.சலாவுதீன், என். குமரன், பாலாஜி, சி.சாய்குமார், சி.சாது, வி.கதிரவன், ஆர்.எஸ்.சந்திரகுமார், ராமச்சந்திரன், சிவா, வெங்கடேசன், காளி, சக்திவேல், ராஜ்குமார், என்.தணிகாலசம், அன்பழகன், எஸ்.எஸ். குமார், எஸ்.எஸ். கண்ணன், ஜஹாங்கீர், எம்.சுமதி, என்.செல்வம், குலசை அமான் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

எம்.நிஜாம், பி.அமுதா, கே.முருகேசன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.